# 6 முயல் அரசன்

7GCJL3

ஒரு விவசாயியின் தோட்டத்தில் விளைந்திருந்த காய்களையும் கனிகளையும், கிழங்குகளையும் வயிறாரத் தின்று வாழ்ந்து கொண்டிருந்தது ஒரு முயல். ஆனாலும், அதன் மனத்தில் ஒரு கவலை, அதற்குக் காரணம் அது வாழும் அந்தக் காட்டைப் பல்லாண்டு காலமாக ஆட்சி செய்து வரும் ஒரு புலி ஆகும். புலிக்குக் கிடைக்கும் மதிப்பு தனக்கும் கிடைக்கவேண்டும் என்று முயல் விரும்பியது. புலியைவிடத் தானே சிறந்தவன் என்று புலிக்கும் காட்டில் உள்ள பிற விலங்குகளுக்கும் மெய்ப்பிக்க வேண்டுமென முயலுக்கு ஆசை தோன்றியது. உடனே, முயல் சிந்தித்துச் செயல்படத் தொடங்கியது. இனி, கதையைப் படிப்போம்...




ஓடினேனா! நானா! உன்னைக் கண்டா...? உனக்குச் செய்தியே தெரியாதா? உனக்கு எங்கே தெரியப்போகிறது... இங்கு கூட்டம் நடந்த போது நீ தான் அப்பாவி விலங்குகளை வேட்டையாடிக் கொண்டிருந்தாயே...
எல்லா விலங்குகளும் கூட்டத்திற்கு வந்திருந்தனவா?
சில விலங்குகளைத் தவிர எல்லா விலங்குகளும் வந்திருந்தன.
கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டது?
நீ இந்தக் காட்டின் அரசனாக இனிமேலும் நீடிக்கக் கூடாது என்று எல்லா விலங்குகளும் ஒரே மனதாகத் தீர்மானம் நிறைவேற்றின
நான் அரசனாக நீடிக்கக் கூடாதா? அப்படியானால் வேறு யார் அரசனாக இருப்பது?
இந்தக் காட்டிலேயே பயங்கரமான மூர்க்கமான விலங்காகிய என்னைத் தான் எல்லா விலங்குகளும் புதிய அரசனாகத் தேர்ந்தெடுத்தன.
வேடிக்கைப் பேச்சு பேசுகிறாய்.. பலமற்ற சிறிய மென்மையான நீ இந்தக் காட்டுக்கு அரசனா? உன்னை இப்போதே ...??
உன் முதுகில் என்னை ஏற்றிக்கொண்டு போ. இக்காட்டு விலங்குகள் என்னைப் பார்த்து அஞ்சுவதை உனக்கு மெய்ப்பித்துக் காட்டுகிறேன்


ம்.. ம்.. ம்... நட....
இந்த முயல் எப்படிப் புலியின் மேல் அமர்ந்து வருகிறது!
எல்லா விலங்குகளும் பயப்படுகின்றனவே...! முயல் கொடிய விலங்காகத்தான் இருக்குமோ!
முயல் அரசே! நான் உங்களைத் தவறாகப் பேசியிருந்தால் மன்னித்து விட்டு விடுங்கள்.
இப்பொழுது இந்தக் காட்டுக்கு அரசன் யார்?
நீங்கள் தாம்!
உரக்கச் சொல்
தாங்கள் தாம் இந்தக் காட்டுக்கு அரசன்
உன்னை மன்னித்து விடுகிறேன். நீ இந்தக் காட்டிலேயே இருக்கக்கூடாது. எங்காவது ஓடிப்போய்விடு!
ஐயோ! என்னை விட்டுவிடுங்கள் நான் போய் விடுகிறேன்..!
இப்போதெல்லாம் முயல் வயிறு நிரம்பச் சாப்பிட்டு, நிம்மதியாக, சுகமாகப் பகல் வேளைகளில் ஒரு குட்டித் தூக்கம் போட்டுக் கொண்டிருக்கிறது.



## வாங்க பேசலாம்

- இக்கதையை உனது சொந்த நடையில் கூறுக.
- காட்டின் அரசனாக நீ எந்த விலங்கை அமர்த்துவாய்? காரணம் என்ன?
- புலி எதையும் ஆராயாமல் முயலின் பேச்சை உண்மை என ஏற்றுக்கொண்டது சரியானதா? கலந்துரையாடுக.



### சிந்திக்கலாமா?

தவறு செய்பவர்களை என்ன செய்யலாம்?
திருத்தலாமா ?
அப்படியே விட்டுவிடலாமா ?

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 பல்லாண்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

அ) பல் + லாண்டு ஆ) பல் + ஆண்டு
இ) பல + ஆண்டு ஈ) பல + யாண்டு

02 செயலாக்கம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

அ) செய + லாக்கம் ஆ) செயல் + ஆக்கம்
இ) செயலா + ஆக்கம் ஈ) செயல் + லாக்கம்

03 இப்போது+ எல்லாம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................................

அ) இப்போதெல்லாம் ஆ) இப்போது எல்லாம்
இ) இப்போல்லாம் ஈ) இப்போ யெல்லாம்

04 பேசி + இருந்தால் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........................................

அ) பேசியிருந்தால் ஆ) பேசியிரு

இ) பேசிஇருந்தால் ஈ) பேசவிருந்தால்

05 வந்து + இருந்தது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........................................

அ) வந்துஇருந்தது ஆ) வந்திஇருந்தது

இ) வந்திருந்தது ஈ) வந்தியிருந்தது

## வினாக்களுக்கு விடையளி

01 முயலின் கவலைக்குக் காரணம் என்ன?

02 விலங்குகளின் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டதாக முயல் கூறியது?

03 முயல், தான் அரசன் என்பதை மெய்ப்பிக்க புலியை என்ன செய்யக் கூறியது?

04 புலியை மன்னித்து விட்டுவிட முயல் கூறிய கட்டுப்பாடு என்ன?

05 விலங்குகள் உண்மையில் எதைக் கண்டு அஞ்சின?

## எதிர்ச்சொல்லால் சொற்றொடரை நிறைவுசெய்க

01 பருவ மழை பெய்தால் மக்கள் மகிழ்ச்சி அடைவர், பெய்யாவிட்டால் .............................................. அடைவர்.

02 எப்பொழுதும் உண்மை பேச வேண்டும், .............................................. பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

03 தோல்வி என்பது முடிவு அல்ல வெற்றியின் ..............................................

04 கணினி மூலம் கல்வி கற்பது புதிய முறை. கரும்பலகை மூலம் கல்வி கற்றது .............................................. முறை

05 பிறருக்குக் கொடுத்து உதவுவது உயர்ந்த குணம். பிறர் பொருளைத் திருடுவது .............................................. குணம்

06 மருத்துவமனைகளில் சத்தமாகப் பேசாமல் .............................................. பேச வேண்டும்

- பழைய
- கவலை
- மெதுவாக
- தொடக்கம்
- தாழ்ந்த
- பொய்

## சரி ☑, தவறு ☒ எனச் சரியான குறியிடுக

01 புலி, முயலின் முன்னோரைக் கொன்று தின்றுவிட்டது. ☐


02 முயல் புலிக்குக் கரும்பு கொடுத்தது. ☐

03 விலங்குகளின் கூட்டம் நடந்த போது புலி தூங்கிக் கொண்டிருந்தது. ☐

04 முயல் புலியிடம் காட்டிலுள்ள விலங்குகள் எல்லாம் தன்னைக் கண்டு அஞ்சுவதாகக் கூறியது. ☐

05 முயல் புலியைக் காட்டிலிருந்து ஆட்சி செய்ய வேண்டும் எனக் கூறியது. ☐

## சக்கரம் காட்டும் ஈரெழுத்துச் சொற்கள் என்ன என்பதை கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடிக்க.




01 உலகம் என்பதன் வேறு சொல் ..............................

02 திருவிழா என்றாலே இது இருக்கும் ..............................

03 மக்கள் சேர்ந்து வாழுமிடம் ..............................

04 இது இல்லாமல் உயிர்கள் இல்லை ..............................


05 நீர் விட்டுத் தயிரைக் கடைந்தால் ..............................

06 மரம், செடி கொடி மண்ணில் ஊன்றி நிற்க உதவுவது ..............................

07 மன்னர்கள் தம் நாட்டின் எல்லையை விரிவுபடுத்த அண்டை நாடுகளோடு தொடுப்பது ..............................

08 பூத்தொடுக்க உதவுவது ..............................


## எது முன்னே? எது பின்னே? அகர வரிசைப்படுத்துக.



**பௌத்தம், பெட்டி, போர்வை, படை, பூமி, பிண்ணாக்கு பீர்க்கு, புத்தகம், பைந்தமிழ், பொத்தான்.**

# மொழியோடு விளையாடு

## காலியிடங்களைக் கூடையில் உள்ள சொற்களைக் கொண்டு நிரப்புக






## செயல் திட்டம்

நூலகத்திற்குச் சென்று சிறுவர் இதழ்களில் உள்ள படக்கதைகளைப் படித்து வருக. அவற்றுள் மூன்று கதைகளை உமது குறிப்பேட்டில் எழுதிவந்து வகுப்பறையில் கூறுக.